நாள் -06.10.2021

O.S.No.273-2013

வா.சா. 2(வேலதாஸ் ) மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பு கு.வி தொடர்ச்சி

அரசன் விளை என்ற ஊரின் பெயரை பேயோடு என்று மாற்றிய காரணத்திற்காக மேலசங்கரன்குழி பஞ்சாத்து தலைவரை சந்தித்து வழக்கின் விபரங்களை கேட்டு அறிந்துகொண்டேன். மேலசங்கரன்குழி பஞ்சாயத்து தலைவர் என்னிடம் மாவட்ட ஆட்சிதலைவர் கடிதம் எழுதி பெயர் மாற்றம் செய்த விபரத்தினை என்னிடம் தெரிவித்ததாக என்னுடைய மு.வி சாட்சியத்தில் கூறியுள்ள விபரம் சரிதான். அதன்அடிப்படையில் தான் இதற்கு முன்பு ஊர் பெயர் சம்பந்தமான முன் வழக்கு குறித்த விபரத்தினையும், ஆதாரத்தினையும் எடுத்துக்கொண்டோம். அ.வ.எண்.814/1998 வழக்கின் விரத்தினை மட்டும் பார்வையிட்டேன். மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நடந்த வழக்கின் விபரத்தினை நான் பார்வையிடவில்லை. 2011ம் ஆண்டு மேற்படி அ.வ.எண்.814/1998 பிறப்பிக்கப்பட்ட தீர்பாணையின்மேல் நிறைவேற்ற மனு தாக்கல் செய்யப்பட்ட விபரம் தெரியும். நிறைவேற்று மனுவின் நகல் எடுத்து நான் படித்து பார்த்துள்ளேன். நிறைவேற்று மனுவில் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு விபரம் குறிப்பிடபட்டிருந்தது என்றால் சரிதான். நிறைவேற்று மனுவில் முன்

வழக்குகளில் எங்களை கட்சி சேர்க்காத காரணத்தினால் வழக்கினை மீண்டும் விசாரிக்கவேண்டும் என்ற நாங்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. எங்களுடைய ஊரை சார்ந்தவர் சாமுவேல் என்றாலும், அவர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் ஏற்கனவே வழக்கு தொடுத்து அது முடிக்கப்பட்ட காரணத்தினால் தான் நாங்கள் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தினை அனுகவில்லை என்றால் சரியல்ல. நிறைவேறு மனு நிலுவையில் இருக்கும்போது ஊருக்கு பெயர் மாற்றம் செய்யகூடாது என்று இடைக்கால மனு தாக்கல் செய்துள்ளோம். எங்களுடைய மனுவிற்கான எதிருரையில் ஏற்கனவே மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் உத்தரவின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுவருவதாகவும், வரும்காலத்தில் முழுமையாக பெயர்மாற்றம் செய்யப்படும் என்று குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்திருந்தால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவர்கள் எதிருரை தாக்கல் செய்யும்வரை நாங்கள் கொடுத்திருந்த மனு நிலுவையில் இருந்தது. மேற்படி நிறைவேற்று மனுவில் அரசாங்கத்தின் சார்பில் வரும்காலங்களில் பெயர் மாற்றம் செய்யப்படும் உறுதி அளித்த காரணத்தினால் இம்மனுவின் மனுதாரர்கள் நிறைவேற்று மனுவினை பின்வலித்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். பேயோடு கிழக்கு எல்லை தோப்பூரில் தொடங்கி அரசன்விளையில் எல்லை முடிவு பெறுவதாக குறிப்பிட்டுள்ளோம். என்னுடைய மு.வி சாட்சியத்தில்

நாங்கள் அனுப்பிய வழக்கறிர் அறிக்கையில் பேயோடு மேற்கு எல்கை அரசன்விளை என்று குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். அரசன்விளை என்று குறிப்பிடப்படும் ஊரில் உள்ள 5 புல எண்களும் பேயோட்டில் தான் இருப்பதாக மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் நிர்ணயிக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. நான் கோயிலில் தற்மகர்த்தா என்ற பதவியில் இருப்பதாக என்னுடைய மு.வி சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளேன்என்றால் சரிதான், ஆனால் அக்கோயிலில் அவர்கள் சார்ப்பாக என்னை வழக்கு நடத்த அதிகாரம் கொடுத்து எந்த தீர்மானமும் நிறைவேற்றவில்லை என்றால்சரிதான். அரசன்விளை என்ற ஊர் பெயரின்மேல் எனக்கு உள்ள தொடர்பின் காணரமாக தான் வழக்கினை தாக்கல் செய்தேன். வழக்கின் 4ம் பிரதிவாதி அவர்களின் ஊர் பெயர் பேயோடு மீது அவர்களுக்குள் உள்ள தொடர்பின் அடிப்படையில் தான் வழக்கு எதிர்த்துள்ளார் என்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கின் 4ம் பிரதிவாதிக்கு வழக்கு மனுதாருக்கும் சம்பந்தமல்ல என்றால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் குறித்து வழக்கும் 2ம் பிரதிவாதி மாவட்ட ஆட்சிதலைவர், மாண்புமிகு உயர்நீதிமன்றம் இறுதி மொழி செய்திருந்த காரணத்தினால் தான் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும்போது செய்திதாளில் பரிசுரப்படுத்தப்பட்டது என்றால் சரிதான். அ.வ.எண்.814/

1998வழக்கும் செய்திதாளில் பரிசுரம் படுத்திதான் செய்யப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி வழக்கில் வெளியிடப்பட்ட பொது அறிவிப்பினை பார்த்து தெரிந்துகொண்டுதான் சாமுவேல் என்பர் வழக்கு தொடுத்தார் என்றால் அதுபற்றி தெரியாது. ஆகவே சாமுவேல் தொடுத்த முன் வழக்குகளில் பிறப்பிக்கப்பட்ட ஆணை தீர்ப்பு, தீர்ப்பாணை எங்களை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கு நிலைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி இல்லை

கு.வி. முடிக்கப்படுகிறது.